# ஐஎஸ் இயக்கத்துடன் தொடர்பு: ஆம்புலன்ஸ் ஓட்டுநர் கைது

## 16 இடங்களில் என்ஐஏ சோதனை; முக்கிய ஆவணங்கள் பறிமுதல்

**சென்னை / சீர்காழி, ஜன.28:** தடை செய்யப்பட்ட ஐஎஸ் பயங்கரவாத இயக்கத்துக்கு ஆள் சேர்த்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், சென்னையைச் சேர்ந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநரை என்ஐஏ (தேசிய புலனாய்வு முகமை) அதிகாரிகள் கைது செய்தனர்.



கைது செய்யப்பட்ட ஆம்புலன்ஸ் ஓட்டுநர் அல் பாஸித்.

இது தொடர்பாக சென்னை, மயிலாடுதுறை மாவட்டம் திருமுல்லைவாசல் பகுதிகளில் 16 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் குழுவினர் சோதனை நடத்தி, முக்கிய ஆவணங்களை பறிமுதல் செய்தனர்.

சென்னை, மயிலாடுதுறை மாவட்டத்தில் சிலர் தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக செயல்படுவதாகவும், அந்த இயக்கத்துக்கு இளைஞர்களை சேர்த்து வருவதாகவும் என்ஐஏ-வுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இத் தகவலின் அடிப்படையில் என்ஐஏ அதிகாரிகள் விசாரணை செய்தனர்.

**ஆம்புலன்ஸ் ஓட்டுநர் அல் பாஸித்:** விசாரணையில் மயிலாடுதுறை மாவட்டம் திருமுல்லைவாசல் சொக்கலிங்கம் நகரைச் சேர்ந்த அல் பாஸித் (27) என்பவர், ஐஎஸ் இயக்கத்துக்கு ஆதரவாக இளைஞர்களை மூளைச் சலவை செய்து வருவதும், அந்த இயக்கத்துக்காக சமூக ஊடகங்களில் பிரசாரம் செய்து அதன் மூலம் ஈர்க்கப்படும் இளைஞர்களை தொடர்பு கொண்டு பேசி பயங்கரவாத இயக்கத்தில் சேர்ப்பதும், இதற்காக அவர் வாட்ஸ் ஆப்பில் குழு வைத்து நடத்தி வருவதும் என்ஐஏ அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

இதனடிப்படையில் அல் பாஸித் ஆம்புலன்ஸ் ஓட்டுநராக வேலை செய்யும் சென்னை புரசைவாக்கம் அழகப்பா சாலையில் உள்ள ஒரு தனியார் ஆம்புலன்ஸ் நிறுவனத்துக்கு என்ஐஏ அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை அதிகாலை சென்று அவரைப் பிடித்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

அங்கு பல மணி நேரம் அல் பாஸித்திடம் என்ஐஏ அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

அதன் முடிவில் அல்பாஸித்தை கைது செய்ததாக என்ஐஏ அதிகாரிகள் அறிவித்தனர். மேலும் அல் பாஸித், ஐஎஸ் பயங்கரவாத இயக்கத்தின் தமிழகக் கிளையின் முக்கிய நிர்வாகியாக இருந்ததையும், அந்த அமைப்புக்கு மூளையாக செயல்பட்டதையும் என்ஐஏ அதிகாரிகள் விசாரணையில் உறுதிப்படுத்தினர்.

**16 இடங்களில் சோதனை:** இதற்கிடையே, இந்த வழக்குக்கான ஆதாரங்களையும், தடயங்களையும் திரட்டும் வகையில் அல் பாஸித், புரசைவாக்கத்தில் தங்கியிருந்த குடியிருப்பிலும், திருமுல்லைவாசல் பிரதானசாலை, பெருமாள் கோயில் தெரு, சொக்கலிங்கம் நகர், அண்ணாநகர், அமீன் நகர், பள்ளிவாசல் தெரு, எம்.ஜி.ஆர்.நகர், நடுத்தெரு, எல்லைகட்டிதெரு உள்ளிட்ட16 இடங்களில் உள்ள வீடுகளில் அதிகாலை 5 மணி முதல் என்ஐஏ அதிகாரிகள் சோதனை செய்தனர்.

இச் சோதனை நண்பகலுக்கு பின்னர் ஒவ்வொரு இடமாக நிறைவு பெற்றது. மாலையில் அனைத்து இடங்களிலும் சோதனை நிறைவடைந்தது. சோதனையில் கைப்பேசிகள்,மடிக்கணினிகள், ஹார்டு டிஸ்குகள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. சோதனை நடைபெற்ற பகுதிகளில் பாதுகாப்புக்காக உள்ளூர் போலீஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

**15 பேருக்கு அழைப்பாணை:** மேலும் அல் பாஸித்துடன் தொடர்பில் இருந்ததாக சந்தேகிக்கப்படும் 15 பேரையும், சென்னை புரசைவாக்கத்தில் உள்ள அலுவலகத்தில் ஜன.31-ஆம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு என்ஐஏ அதிகாரிகள் அழைப்பாணை வழங்கினர்.

அல் பாஸித்தின் திருமுல்லைவாசல்வீட்டில் கடந்த 2022 அக்டோபர் மாதம் கோயம்புத்தூர் கார் குண்டுவெடிப்பு வழக்குத் தொடர்பாக என்ஐஏ அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு, ஆவணங்களை கைப்பற்றிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் நூல்கள் 50% சலுகை விலையில் விற்பனை

## தமிழ் வளர்ச்சிக் கழகம் தகவல்

**சென்னை, ஜன. 28:** தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்க் கலைக் களஞ்சியங்கள் உள்பட 60-க்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் 50 சதவீத சலுகை விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இது குறித்து அந்தக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் முனைப்புடன் செயல்படவும், தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ள இருக்கும் பணித் திட்டங்கள் குறித்து முடிவு செய்யவும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு ஆகியவற்றின் சிறப்புக் கூட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு அறங்காவல் குழுவின் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப.சிதம்பரம் தலைமை வகித்தார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும் முன்னாள் துணைவேந்தருமான ம.இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.



சென்னையில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற அறங்காவல் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு கூட்டத்தில் பங்கேற்ற கழகத்தின் தலைவர் ம.இராசேந்திரன், அறங்காவல் குழுத் தலைவர் ப.சிதம்பரம், அறங்காவல் குழு உறுப்பினர் நல்லி குப்புசாமி செட்டி.

இந்தக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்க் கலைக் களஞ்சியங்கள் உள்ளிட்ட 60-க்கும் மேற்பட்ட தமிழ் நூல்களை 50 சதவீத சலுகை விலையில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது.

மேலும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இணையதளத்தை (http: //tamilvk.org) ப. சிதம்பரம் தொடங்கி வைத்தார்.

இதில் சென்னைப் பல்கலை. யின் பதிவாளர் எஸ். ஏழுமலை, நல்லி குப்புசாமி செட்டி, கிருஷ்ணசந்த் சோர்டியா, தமிழ்நாடு அறக்கட்டளைத் தலைவர் இராசரெத்தினம், எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், நல்லூர் சரவணன், முனைவர் சாரதா நம்பி ஆரூரன், செயலர் உலகநாயகி பழனி, பதிப்பாசிரியர் பெ. அர்த்தநாரீசுவரன், முனைவர் பா.ரா.சுப்பிரமணியன், செம்மொழி நிறுவன இயக்குநர் சந்திரசேகரன், ஒப்பிலா மதிவாணன், சேயோன், திருப்பூர் கிருஷ்ணன், மருத்துவர் கல்யாணசுந்தரம், முன்னாள் துணைவேந்தர் காளிராஜ், மணிமேகலை கண்ணன், வாசுகி கண்ணப்பன், நெல்லை சு.முத்து, வழக்குரைஞர் சந்திரமோகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தங்கம் பவுனுக்கு ரூ.240 குறைவு

**சென்னை, ஜன. 28:** சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை செவ்வாய்க்கிழமை பவுனுக்கு ரூ.240 குறைந்து ரூ. 60,080-க்கு விற்பனையானது.



சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வரும் நிலையில் திங்கள்கிழமை பவுனுக்கு ரூ.120 குறைந்து ரூ.60,320-க்கு விற்பனையானது.

செவ்வாய்க்கிழமை கிராமுக்கு ரூ.30 குறைந்து ரூ.7,510-க்கும், பவுனுக்கு ரூ.240 குறைந்து ரூ. 60,080-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை எவ்வித மாற்றமுமின்றி ஒரு கிராம் ரூ.104-க்கும், கட்டி வெள்ளி (ஒரு கிலோ) ரூ.1,04,000-க்கும் விற்பனையானது.

# இந்திய அயலகப் பணி அதிகாரிகள் 7 பேர் தமிழ்நாடு வருகை

**சென்னை, ஜன. 28:** ஒருவார காலப் பயணமாக தமிழ்நாடு வந்துள்ள இந்திய அயலகப் பணி அதிகாரிகளை தலைமைச் செயலர் நா.முருகானந்தம் வரவேற்றார். அவர்கள் மாநிலத்தின் பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்வையிட உள்ளனர்.

இந்திய ஆட்சிப் பணி பிரிவுகளில் ஒன்றான இந்திய அயலகப் பணியைச் சேர்ந்த அதிகாரிகள் கோபில்லா கிருஷ்ணா ஸ்ரீவத்சவ், ஜி.கிருஷ்ணகுமார், பி.அனுஜா, ஜி.சத்யநந்தி, ஜி.ஹரிசங்கர், பி.வி.அப்துல் பசல், கோகுல் கிருஷ்ணா ஆகியோர் தமிழ்நாடு வந்துள்ளனர். அவர்கள் தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் நா.முருகானந்தத்தை செவ்வாய்க்கிழமை சந்தித்தனர்.

அப்போது, அவர்களுக்கு மரக்கன்றை வழங்கி அவர் வரவேற்றார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பி.அமுதா, மனிதவள மேலாண்மைத் துறை செயலர் சி.சமயமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

ஒருவார காலம் தங்கியிருக்கும் இந்திய அயலகப் பணி அதிகாரிகள், தமிழ்நாட்டின் பாரம்பரிய பெருமையை பறைசாற்றும் இடங்களைப் பார்வையிட உள்ளனர்.

குறிப்பாக, மாமல்லபுரம், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், ஜல்லிக்கட்டு அரங்கம், கீழடி அருங்காட்சியகம், திருவள்ளுவர் சிலை, தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய முக்கியமான இடங்களைப் பார்வையிட உள்ளனர்.


GOVERNMENT OF TAMIL NADU

**PROJECT DEVELOPMENT GRANT FUND (PDGF)**

**INVITATION FOR PROPOSALS (IFP)**

**Consulting services**

Ref: PDGF/GoTN/SLF-Feasibility & TA/Jan/2025

1. Project Development Grant Fund (PDGF) intends to appoint a firm to provide the following consulting services as detailed in the table given below:

| Description of Services | Estimated Value incl. GST in Rs. | EMD in Rs. | e-Tender Submission last date | e-Tender Opening date |
|---|---|---|---|---|
| Consultancy Services "Preparation of Detailed Feasibility Report and providing Transaction Advisory Services for setting up for the establishment of Sanitary Landfill facility with allied works complete through Public Private Participation (PPP) mode in Coimbatore, Madurai, Tambaram, Tiruchirappalli City Municipal Corporations" | 2,00,00,000/- | 2,00,000/- | 28-02-2025 upto 10.00 hrs. | 28-02-2025 on 12.30 hrs. |

1. The assignment is open to all eligible firms. The Request for Proposals (RFP) may be downloaded and used free of cost from the website viz. **www.tntenders.gov.in.**
2. A pre-proposal conference will be held on **10.02.2025 at 11.00 am** in the office of TNUIFSL, to clarify queries, if any as stated in the RFP.
3. Proposals complete in all aspects must be submitted online through the Tamil Nadu e-Procurement website, as specified in the RFP.
4. Any Clarifications, Minutes of Pre-proposal meeting, Extension of time and Addendum & Corrigendum issued will be uploaded only in the Tamil Nadu e-Procurement website. Other details are available in the RFP.

Additional Chief Secretary / Chairman & Managing Director, TNUIFSL
Fund Manager of PDGF

DIPR/337/TENDER/2025



ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!



தமிழ்நாடு அரசு

**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் மாவட்டம்**

ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டம் (SCPAR) - 2024 -2025

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.36/2025/அ8 — நாள் : 27.01.2025

மின் ஒப்பந்தப்புள்ளி

1 முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2 நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டத்தின் கீழ் SCPAR 2024-2025 மல்லசமுத்திரம் வட்டாரம் மரப்பரை ஊராட்சி வையப்பமலை குக்கிராமத்தில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலைப்பாதையில் புதிய தார் சாலை அமைக்கும் பணிக்கு இ-மின் ஒப்பந்தப்புள்ளி (இரு உறைகள்) மூலம் வரவேற்கப்படுகிறது.
3 ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 29.01.2025 முதல் 12.02.2025 வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
i) மின் ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 12.02.2025 - பிற்பகல் 03.00 மணி வரை
ii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 12.02.2025 - பிற்பகல் 04.00 மணி முதல்

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல்.

செ.ம.தொ.இ/327/ஒப்பந்தப்புள்ளி/2025



தமிழ்நாடு அரசு

**நீர்வளத்துறை**

**வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர் - 607 001.**

**மொத்த தொகை ஒப்பந்த முறை-விலை விகித ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை ஒப்பந்த வழி முறை)**

**மின்னணு–ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.09/வெவவ/கடலூர்/2024–2025/வஅ1/ நாள்: 28.01.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவரது சார்பாகவும் மின்னணு (e - Tender) வழியாக உரிய வகுப்பில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த கட்டுமானப் பணிகள் மற்றும் பாசனப் பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்காணிப்புப்பொறியாளர், நீவது, வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்–1 அவர்களால், கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் (மழைக் காலம் உட்பட) | இணைய வழி மூலமாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் இறுதி நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) | இணைய வழி மூலமாக ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) |
|---|---|---|---|---|---|---|
| 1 | கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் ஒட்ரபாளையம் கிராம எல்லைக்கும் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் பால்ரான்படுகை கிராம எல்லைக்கும் இடையில் கொள்ளிடம் ஆற்றின் தொ.க.145 கி.மீ.ல் தரைகீழ் நீர் நெறிச்சுவர் அமைக்கும் பணி. | ரூ.8318.00 | ரூ. 41,72,000/- | 24 மாதங்கள் | 03.03.2025 15.00 மணி வரை | 04.03.2025 15.30 மணிக்கு |

ஒப்பந்தப்புள்ளி 31.01.2025 முதல் https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய விபரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதி முறைகளை மேற்காணும் இணையதளத்தில் பார்க்கலாம். மேலும் கண்காணிப்புப் பொறியாளர், நீவது., வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்–1, அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம். திருத்தங்கள் / கால நீட்டிப்பு / மாற்றங்கள் ஏதாவது இருப்பின், மேற்குறிப்பிட்ட இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

கண்காணிப்புப்பொறியாளர், நீவது,
வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்.

செ.ம.தொ.இ / 344 / ஒப்பந்தப்புள்ளி / 2025



SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

பிராந்திய அலுவலகம் : எண்.43, தரைத் தளம், ஹமீதியா சென்டர், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை–600006. தமிழ்நாடு, போன் : 044–28281109/28238250, E-mail : ro1005@sib.co.in

**மின் ஏல விற்பனை அறிவிப்பு**

Ref: RO/SAR/SN/235/2024-25 — தேதி : 06.01.2025

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) மற்றும் 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.**

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.ஏகாந்தலால் கரண்லால், ஃப்ளாட் எண்.13, சின்னையா கார்டன், முதல் தெரு, கிழக்கு ஜோன்ஸ், சைதாப்பேட்டை, சென்னை – 600 015. மேலும் ; எண்.26/11, கிருஷ்ணன் வீதி, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033. | 2) | திருமதி.பாரதி கரண்லால், க/பெ.திரு.ஏகாந்தலால் கரண்லால், ஃப்ளாட் எண்.13, சின்னையா கார்டன், முதல் தெரு, கிழக்கு ஜோன்ஸ், சைதாப்பேட்டை, சென்னை – 600 015. மேலும் : எண்.26/11, கிருஷ்ணன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033. |

இதனால் பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் தெரிவிப்பது என்னவென்றால், **தி சௌத் இந்தியன் வங்கி லிட்., பூந்தமல்லி கிளை** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) கீழே குறிப்பிட்டுள்ள, அடமானப்படுத்தப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை, கொள்நிலை சுவாதீனம் (Physical Possession) மேற்கொண்டவற்றை **தி சௌத் இந்தியன் வங்கி லிட்.,** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் **"எங்கு உள்ளதோ அங்கு" "என்ன உள்ளதோ அது" "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **தி சௌத் இந்தியன் வங்கி லிட்., பூந்தமல்லி கிளைக்கு** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) வரவேண்டிய **05.01.2025** அன்றைய தேதி வரையான நிலுவைத் தொகை **ரூ.1,70,06,030.56 (ரூபாய் ஒரு கோடியே எழுபது லட்சத்து ஆறாயிரத்து முப்பது மற்றும் பைசா ஐம்பத்து ஆறு மட்டும்)** மற்றும் பின்வட்டி, பிற செலவுகளை மேலே குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்)களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு **13.02.2025** அன்று விற்பனை செய்ய உத்தேசித்துள்ளார்.

| | |
|---|---|
| சொத்தின் உரிமையாளர் பெயர் | திரு.ஏகாந்தலால் கரண்லால் மற்றும் திருமதி.பாரதி கரண்லால் |
| சொத்து விபரம் | **இனம் எண்.1 :** சென்னை தெற்கு பதிவு மாவட்டம், தி.நகர் சார்பதிவு மாவட்டம், மாம்பலம்–கிண்டி தாலூகாவில், மாம்பலம் கிராமம், சின்னையா கார்டன் முதல் வீதி, சைதாப்பேட்டை சென்னை என்ற முகவரியில் பிளாக் எண்.37, டவுன் சர்வே எண்.51ல் பட்டா C.A எண்.564/2009ன் படியும், மாம்பலம்–கிண்டி தாலூகா, தாசில்தார் வழங்கிய புதிய பட்டா எண்.1097/2012ன் படியும் மொத்தமுள்ள 2178 சதுர அடியில் அடங்கிய 1161 சதுர அடி நிலத்தில் பிரிபடாத பங்கான 243 சதுர அடி நிலமும், மேற்சொன்ன சைதாப்பேட்டை சின்னையா கார்டன் முதல் வீதியில் உள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள, "மஹேந்திரா ஹோம்ஸ்" என்ற பெயருள்ளதுமான கட்டிடத்தின் ஃப்ளாட் G1 என்ற 594 சதுர அடி தரை தளத்திலுள்ள கட்டிடம் சேர்ந்த சொத்து. இச்சொத்து உள்ள மொத்த **நிலத்தின் எல்லைகள் :** வடக்கே : கஸ்தூரியின் மீத நிலம், தெற்கே : சர்வே எண்.47/3ல் உள்ள 3 அடி பொதுத்தடமும் வீட்டுமனைகளும், கிழக்கே : சர்வே எண்.52 நிலம் மற்றும் சின்னையா கார்டன் முதல் வீதி, மேற்கே : சர்வே எண்.50 மற்றும் வீட்டுமனைகள் புற அளவாக தென்வடல் கிழபுறம் 16 அடி, மேல்புறம் 27 அடி, கிழமேல் வடபுறம் 65 அடி, தென்புறம் 54 அடி ஆக உள்ள மனை நிலம் மற்றும் அதன் பிற அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. தி. நகர் சார்பதிவக கட்டுமான ஒப்பந்தப் பத்திர ஆவண எண். 2439/2015 நாள் 29.06.2015 மற்றும் விற்பனைப் பத்திர ஆவண எண்.2440/2015 நாள் 23.09.2015ல் கண்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள இச்சொத்து திரு.ஏகாந்தலால் கரண்லால் மற்றும் திருமதி.பாரதி கரண்லால் பெயரில் உள்ளது. **இனம் எண்.2 :** சென்னை தெற்கு பதிவு மாவட்டம், திநகர் சார்பதிவு மாவட்டம், மாம்பலம்–கிண்டி தாலூகாவில், மாம்பலம் கிராமம், சின்னையா கார்டன் முதல் வீதி, சைதாப்பேட்டை சென்னை என்ற முகவரியில் பிளாக் எண்.37, டவுன் சர்வே எண்.51ல் பட்டா CA எண்.564/2009ன் படியும், மாம்பலம் கிண்டி தாலூகா, தாசில்தார் வழங்கிய புதிய பட்டா எண்.1097/2012ன் படியும் மொத்தமுள்ள 2178 சதுர அடியில் அடங்கிய 1161 சதுர அடி நிலத்தில் பிரிபடாத பங்கான 201 சதுர அடி நிலமும் மேற்சொன்ன சைதாப்பேட்டை சின்னையா கார்டன் முதல் வீதியில் உள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள "மஹேந்திரா ஹோம்ஸ்" என்ற பெயருள்ள கட்டிடத்தின் ஃப்ளாட் S1 என்ற இரண்டாம் தளத்தில் 491 சதுர அடி தளப்பரப்புள்ள கட்டிடம் சேர்ந்த சொத்து. இச்சொத்துள்ள **நிலத்தின் எல்லைகள் :** வடக்கே : கஸ்தூரியின் மீத நிலம், தெற்கே : சர்வே எண்.47/3ல் உள்ள 3 அடி பொதுத்தடமும் வீட்டுமனைகளும், கிழக்கே : சர்வே எண்.52 நிலம் மற்றும் சின்னையா கார்டன் முதல் வீதி, மேற்கே : சர்வே எண்.50 மற்றும் வீட்டுமனைகள் புற அளவாக தென்வடல் கிழபுறம் 16 அடி, மேல்புறம் 27 அடி, கிழமேல் வடபுறம் 65 அடி, தென்புறம் 54 அடி ஆக உள்ள மனை நிலம் மற்றும் அதன் பிற அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. திநகர் சார்பதிவக கட்டுமான ஒப்பந்தப்பத்திர ஆவண எண். 2437/2015 நாள் 29.06.2015 மற்றும் விற்பனைப் பத்திர ஆவண எண்.2438/2015 நாள் 23.09.2015ல் கண்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள இச்சொத்து திரு.ஏகாந்தலால் கரண்லால் மற்றும் திருமதி.பாரதி கரண்லால் பெயரில் உள்ளது. |
| ரிசர்வ் விலை (இனம் எண்.1) | ரூ.26,10,000/– (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) |
| ரிசர்வ் விலை (இனம் எண்.2) | ரூ.21,60,000/– (ரூபாய் இருபத்து ஒரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) |
| முன் வைப்புத் தொகை (EMD) (இனம் எண்.1) | ரூ.2,61,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்து ஓராயிரம் மட்டும்) |
| முன் வைப்புத் தொகை (EMD) (இனம் எண்.2) | ரூ.2,16,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்) |
| ஏலக் கேட்பு மடங்கு | ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) |
| விற்பனைத் தேதி மற்றும் நேரம் | 13.02.2025 காலை 11:30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை. (ஏலம் நிறைவு பெறும் வரையிலான 5 நிமிட தன்னிச்சையான அளவற்ற நீட்டிப்புகளுடன்) |
| வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் | 11.07.2022 முதல் 25.07.2023 வரை வில்லங்கங்கள் இல்லை |

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு சௌத் இந்தியன் பேங்க் லிட்–டின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) இணையதள (i.e. **www.southindianbank.com**) போர்டலின் 'லிங்க்'கில்பார்வையிடவும். விபரங்களை ஆகிய www.matexnet.com & https://assets.matexauctions.com இணையதளங்களிலிருந்தும் பெறலாம்.

சொத்தினைப் பார்வையிடுதல் குறித்த விபரங்களுக்கு, மின் ஏலத்தின் நிபந்தனை விபரங்களுக்கு அல்லது ஏலக் குறிப்பீடு சமர்ப்பித்தல் விபரத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலரை அல்லது திரு. பாலகோபால் A K, மொபைல் எண். 6379303822 மற்றும் திரு. அருண்குமார் R, மொபைல் எண். 9894647220 தொடர்பு கொள்ளலாம். அல்லது வங்கியின் பூந்தமல்லி கிளையினை வேலை நேரங்களில் அணுகலாம்.

தேதி : 06.01.2025
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.



# டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்–கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
இணையதளம் : www.tvsholdings.com தொலைபேசி : 044 - 28332115, மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com
CIN : L64200TN1962PLC004792

**31 டிசம்பர் 2024 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்**

(ரூ. கோடிகளில்)

| வ. எண் | விவரங்கள் | தனித்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2024 (தணிக்கை செய்யப்படாதது) | தனித்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2023 (தணிக்கை செய்யப்படாதது) | தனித்தது: முடிவடைந்த ஆண்டு 31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது) | ஒருங்கிணைந்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2024 (தணிக்கை செய்யப்படாதது) | ஒருங்கிணைந்தது: முடிவடைந்த காலாண்டு 31.12.2023 (தணிக்கை செய்யப்படாதது) | ஒருங்கிணைந்தது: முடிவடைந்த ஆண்டு 31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொத்த வருமானம் | 150.49 | 165.76 | 1,646.56 | 11,476.63 | 10,020.94 | 40,282.02 |
| 2 | விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) | 114.61 | 17.34 | 415.19 | 1,023.64 | 787.25 | 2,791.49 |
| 3 | விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) | 114.61 | 17.34 | 410.12 | 1,023.64 | 787.25 | 2,786.42 |
| 4 | விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) | 85.07 | 8.57 | 338.74 | 685.45 | 532.27 | 1,782.38 |
| 5 | நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் | 83.89 | 7.35 | 336.08 | 647.48 | 561.84 | 1,728.28 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-) | 10.12 | 10.12 | 10.12 | 10.12 | 10.12 | 10.12 |
| 7 | ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | | | 1,439.45 | | | 2,829.95 |
| 8 | பங்குகளின் பிரீமியம் கணக்கு | 36.44 | 36.42 | 36.42 | 36.44 | 36.42 | 36.42 |
| 9 | நிகர மதிப்பு | 1,551.06 | 1,409.78 | 1,440.37 | 3,615.78 | 2,789.02 | 2,619.28 |
| 10 | நிலுவையில் உள்ள கடன் (மாற்ற முடியாத திருப்பி எடுக்கக்கூடிய விருப்ப பங்குகளை தவிர்த்து) | 643.64 | - | 550.00 | 27,998.91 | 2,933.04 | 26,232.48 |
| 11 | நிலுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் | - | 873.03 | - | - | 873.03 | - |
| 12 | கடன் சம விகிதாசாரம் (விதிவிலக்கான வகைகள் உட்பட) | 0.03 | NA | 0.31 | 6.10 | 3.48 | 8.24 |
| 13 | பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்) (அ) அடிப்படை | 42.05 | 4.24 | 167.43 | 190.81 | 110.86 | 395.60 |
| | (ஆ) டைல்யூட்டட் | 42.05 | 4.24 | 167.43 | 190.81 | 110.86 | 395.60 |
| 14 | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | NA | | | | | |
| 15 | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | NA | | | | | |
| 16 | கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு) | NA | NA | NA | NA | 2.44 | NA |
| 17 | வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு) | NA | NA | NA | NA | 15.37 | NA |
| 18 | நடப்பு விகிதம் (மடங்கு) | NA | 0.50 | NA | NA | 1.09 | NA |
| 19 | நீண்ட கால கடன் விகிதம் செயல்பாட்டு மூலதனத்திற்கு (மடங்கு) | NA | NA | NA | NA | 2.24 | NA |
| 20 | கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வாராக்கடன் விகிதம் (மடங்கு) | NA | - | NA | NA | - | NA |
| 21 | நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு) | NA | 0.98 | NA | NA | 0.60 | NA |
| 22 | மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு) | 0.28 | NA | 0.23 | 0.60 | 0.60 | 0.59 |
| 23 | கடனாளிகளின் சுழற்சி விகிதம் (மடங்கு) | NA | 11.77 | NA | NA | 23.72 | NA |
| 24 | சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (மடங்கு) | NA | 319.15 | NA | NA | 6.10 | NA |
| 25 | செயல்பாட்டு இலாப விகிதம் (%) | NA | 19.18 | NA | NA | 11.03 | NA |
| 26 | நிகர இலாப விகிதம் (%) | 56.53 | 5.17 | 20.57 | 5.97 | 4.51 | 4.44 |

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.tvsholdings.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி, நிறுவனத்தின் டை காஸ்டிங் வியாபாரம் ஆகஸ்ட் 10, 2023 அன்று பிரிக்கப்பட்டது. அதன்படி, டிசம்பர் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டுக்கான முடிவுகள் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்கள் மற்ற காலங்களுடன் ஒப்பிட முடியாது.
3. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
4. டிசம்பர் 31, 2024 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை கீழே உள்ள (QR) குறியீட்டின் மூலம் அணுகலாம்.

இடம் : பெங்களூரு
தேதி : 28.01.2025

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
சுதர்சன் வேணு
நிர்வாக இயக்குனர்